தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

ரூ. 15/- | மலர் 19 - இதழ் 05- செப்டம்பர் 2017 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

“தூய்மையே சேவை” இயக்க உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,

முதன்மை செயல் அலுவலர்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,

திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

பெண்கள் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை பெண்கள் பொருளாதார சுயசார்பு பெற்று, தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் துவக்கப்பட்ட தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தொடர்ந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வெற்றி என்னும் உன்னத நிலையைப் பெற்றுள்ளது. இந்த வெற்றிக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகிய நீங்கள்தான் காரணம்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக பல்வேறு தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு, தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, நியாயமான விலையில் விற்பனை செய்வதால், அந்தப் பொருட்களை மக்கள் அனைவரும் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

அவ்வாறு நீங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பொது மக்கள் அனைவரும் வாங்கிப் பயன் பெறும் வகையிலும், மகளிர் சுய உதவிக் குழுவினரின் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ளும் வகையிலும், நமது நிறுவனத்தின் சார்பில் கிராம அங்காடிகள், கல்லூரிச் சந்தைகள், வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் விற்பனைக் கண்காட்சிகள், தேசிய அளவில் சாராஸ் விற்பனைக் கண்காட்சி போன்றவை ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒருபகுதியாக சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மாநில அளவிலான மகளிர் மேளா நவராத்திரி விற்பனைக் கண்காட்சி தற்போது நடைபெற்று வருகிறது. இக்கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான பட்டு மற்றும் பருத்தி ஆடைகள், மங்கையர் மனம் கவரும் செயற்கை ஆபரணங்கள், வீட்டிற்கு அழகு சேர்க்கும் அலங்காரப் பொருட்கள், குழந்தைகளை மகிழ்விக்கும் விளையாட்டுப் பொருட்கள், உடலுக்கு நன்மை தரும் உணவு வகைகள், பல்வேறு உலோகங்களில் செய்யப்பட்ட சிற்பங்கள், மருத்துவ குணம் நிறைந்த மூலிகைப் பொருட்கள், நவராத்திரிக்கு ஏற்ற கொலு பொம்மைகள் என ஏராளமான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மகளிர் மேளா நவராத்திரிக் கண்காட்சிக்கு வருகை தரும் அனைவரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை மனநிறைவுடன் வாங்கிச் செல்கின்றனர்.

தற்போது மழைக்காலம் துவங்கி விட்டது. நாம் வசிக்கும் பகுதியில் மழை நீர் ஆங்காங்கே தேங்குவதால், கொசுக்கள் உற்பத்தியாகி டெங்கு போன்ற பல்வேறு நோய்கள் பரவ வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழக அரசு இதுபோன்ற தீங்கு விளைவிக்கக் கூடிய நோய்கள் பரவாமல் தடுக்க பல எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. நாமும் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி, நாம் வசிக்கும் பகுதிகளை சுத்தமாக வைத்துக் கொண்டு, நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

குங்குமப்பூ டீ 10

மகளிர் மேளா 2017 நவராத்திரி விற்பனைக் கண்காட்சி 06

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் 08

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் 24

தூய்மையே சேவை இயக்கம் உறுதி மொழி ஏற்பு 28

தேசியப் பட்டறிவுப் பயணம் 34

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் வெற்றிகள் குறித்த கட்டுரைகளும், மகளிருக்கு பயனளிக்கும் பல்வேறு செய்தி களையும் தொடர்ந்து வெளியிட்டு வரும் முற்றம் இதழுக்கு எங்களின் வாழ்த்துகள், தொடர்ந்து பயனுள்ள கட்டுரைகளை வெளியிடவும்.

திருமதி. சுதா சிவராமன்,
தங்கமகள் மகளிர் சுய உதவிக் குழு,
ஊத்துக்குளி, ஈரோடு மாவட்டம்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்றவற்றின் மூலம் பெண்களின் வாழ்வாதாரம் வளர்ந்துள்ளது என்பதை முற்றம் இதழில் இடம் பெறும் கட்டுரைகள் மூலமாக அனைவரும் அறிந்து கொள்ள முடிகிறது.

திருமதி. சித்ரா ராமமூர்த்தி,
கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளவும், சுகாதாரத்தைக் காக்கவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்த கட்டுரைகளும், திறந்த வெளி மலம் கழித்தலற்ற கிராமங்களை உருவாக்க மேற்கொள்ளும் பணிகளும் சிறப்பாக இருக்கின்றன.

தலைவர் / செயலாளர் / உறுப்பினர்கள்,
குணசீலம் ஊராட்சிக் கூட்டமைப்பு
குணசீலம், திருச்சி மாவட்டம்.

தமிழக கடற்கரையோரங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்யும் வகையில் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளால் இன்று அப்பகுதி வாழ் மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

நிர்வாகிகள் / உறுப்பினர்கள்,
கடல் மீன்கள் சுய உதவிக் குழு,
மீஞ்சூர், திருவள்ளூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்

மலர் 19 – இதழ் 05 – செப்டம்பர் 2017
விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
எஸ். அமிர்த ஜோதி, இ.ஆ.ப.,
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

அண்ணாமலை பிரேம்குமார்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. சுஜாதா ஜேக்கப்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத்
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

சு. சிநேகலதா
கூடுதல் திட்ட இயக்குநர்
புதுவாழ்வு திட்டம்

பொறுப்பாசிரியர்
சு, மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

உயிரைப் போக்கும் "நீல திமிங்கிலம்"

அன்புள்ள வாசகர்களுக்கு,

அறிவியலின் அதிவேக வளர்ச்சியின் காரணமாக அன்றாடம் அதிசயங்கள் பல நிகழ்ந்து கொண்டிருப்பதை காண்கின்றோம். தகவல் பரிமாற்றத்திற்காக உருவாக்கப்பட்ட தொலைபேசியானது, இன்று செல்போனாக உருவெடுத்து, தகவல்கள் பரிமாறிக் கொள்வதோடு நிற்காமல் பல்நோக்கு ஊடகமாக மாறிவிட்டது. சிறுவர் முதல் வயதானவர் வரை, ஆண் பெண் வித்தியாசமின்றி அனைவரது கைகளிலும் சர்வ சாதாரணமாக செல்போனை காண முடிகிறது. அதோடு அன்றாட வாழ்க்கையில் ஒரு அத்தியாவசிய பொருளாகவும் மாறிவிட்டது. செல்போன் பயன்பாட்டால் பல நன்மைகள் நடந்தாலும், எச்சரிக்கைகளை மீறி செல்போனை பயன்படுத்தும் போது, நமது பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்பட்டு, பேராபத்துக்கு வழிவகுத்து விடுகிறது.

செல்போனில் வரும் விளையாட்டுகளில், "நீல திமிங்கிலம்" (ப்ளூ வேல்) என்ற விளையாட்டு இன்று பல இளம் பிள்ளைகளின் உயிருக்கு உலைவைக்கும் விளையாட்டாக உள்ளது. ஏதோ சவால்களை சந்திக்கும் ஒரு விளையாட்டு என்று எதார்த்தமாக விளையாட தொடங்கி, அதிலிருந்து வெளியில் வர முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு சிறுவர்களும், இளைஞர்களும் தள்ளப்பட்டு வருகின்றனர் என்பது அதிர்ச்சியை அளிக்கின்றது. இவ்விளையாட்டின் விளைவாக பல இளைஞர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு இறந்ததையும், சிலர் மீட்கப்பட்டதையும் செய்திகள் மூலம் அறிகின்றோம்.

உங்கள் பிள்ளைகள் செல்போனில் இந்த "நீல திமிங்கிலம்" என்ற விளையாட்டில் ஈடுபடா வண்ணம் தீவிரமாக கண்காணியுங்கள். அவர்கள் கைகளில் திமிங்கிலத்தின் உருவம் வரைவதற்கான அறிகுறிகள் ஏதாகிலும் தென்பட்டால் உடனடியாக அவர்களை தீர விசாரித்து, அந்த விளையாட்டை தடுத்து நிறுத்தி, உடனே மனநல ஆலோசகரிடம் அழைத்துச் சென்று ஆலோசனை பெற செய்யுங்கள். ஒவ்வொரு பெற்றோரும் இதை பெரும் கடமையாக மேற்கொள்ள வேண்டிய நேரம் இது.

செல்போனில் வரும் போலியான விளம்பரங்கள், போலி அழைப்புகள், முன்பின் அறியாதவர்களிடமிருந்து வரும் அழைப்புகள், சூதாட்ட விளையாட்டுகள் ஆகியவற்றை மிக கவனமுடன் கையாள கற்றுக் கொள்ளுங்கள். மாணவ பருவத்தில் இருக்கும் உங்கள் பிள்ளைகள் வெளுத்தவற்றை எல்லாம் பால் என்று நம்பும் மனநிலையில் உள்ளவர்கள். அவர்களை சரியான வழியில் நடத்தி செல்வதற்கு பெற்றோர்களோடு அரசாங்கமும், சமுதாயமும் ஒத்துழைக்க வேண்டியுள்ளது. ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தூய்மையே சேவை – உறுதிமொழி

இன்று முதல் மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி வரை நடைபெற உள்ள “தூய்மையே சேவை” இயக்கத்தில் நம்மை முழுமையாக அர்ப்பணித்து, அதன் மூலம் சுத்தமான, சுகாதாரமான, புதிய பாரதத்தை உருவாக்க உறுதிமொழி ஏற்போம்!

- வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள், சுகாதார நிலையங்கள், தொடர் வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், நீர் நிலைகள் மற்றும் இதர பொது இடங்களில் தூய்மையைக் கடைபிடிப்போம்! என்றும்

- வீடுகளில் இரட்டை உறிஞ்சு குழிகளுடன் கூடிய கழிப்பறை களைக் கட்டுவதுடன், அவ்வாறு கழிப்பறைகள் கட்டாதவர்களையும் கழிப்பறைகள் கட்டச் செய்து செய்து, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமங்களும், நகரங்களும் உருவாக்கப் பாடுபடுவோம்! என்றும்

- கழிப்பறை பயன்படுத்துவதுடன், கை, கால்களை சுத்தமாகக் கழுவுதல் மற்றும் இதர சுகாதார பழக்கங்களையும் கடைபிடிப்போம்! என்றும்

- ‘குறைத்தல், மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு’ என்ற கோட்பாட்டின்படி திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினை பாதுகாப்பான முறையில் செயல்படுத்துவோம் என்றும் உறுதி ஏற்போம்!!

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்

மகளிர் மேளா 2017 நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

பெண்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் தரமான பல்வேறு பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்தி, அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்திடவும், அவர் களின் திறனை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும் கிராம அங்காடிகள், கல்லூரிச் சந்தைகள், வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகள், தேசிய அளவிலான சாராஸ் கண்காட்சிகள் என பல்வேறு கண்காட்சிகள் ஆண்டுதோறும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வாயிலாக நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னையில் மாநில அளவில் பண்டிகை மற்றும் விடு முறை நாட்களில் விற்பனைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு, நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு, சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் 'மகளிர் மேளா 2017 நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை' 15.09.2017 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்களும், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும் இணைந்து குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

பின்னர் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பொருட்காட்சியில் அமைக்கப் பட்டிருந்த அனைத்து அரங்குகளையும் பார்வையிட்டு, அங்கிருந்த சுய உதவிக் குழுவினரிடம், அவர்கள் தயாரித்த பொருட்களின் விபரங்களைக் கேட்டறிந்தனர்.

கண்காட்சியைத் துவக்கி வைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, "தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 2011 முதல் இதுவரை நடைபெற்ற சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளின் மூலம் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் மொத்தம் 6,69,57,000/– ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் நமது மாநிலம் மற்றும் பிற மாநிலங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான சாராஸ் விற்பனைக் கண்காட்சிகளில் 974 குழுக்கள் கலந்து கொண்டு 2,57,49,148 ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்து, மகளிர் சுய உதவிக் குழுவினர் பயனடைந்துள்ளனர்" என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. எஸ். ஆர். விஜயகுமார் அவர்கள், தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் தலைவர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர் இ.ஆ.ப., அவர்கள், மகளிர் திட்டத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திரு. அண்ணாமலை பிரேம்குமார் அவர்கள், திருமதி. சி. சுஜாதா ஜேக்கப் அவர்கள், புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத் அவர்கள், திருமதி. சு. சிநேகலதா அவர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள், பத்திரிக்கையாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

15.09.2017 முதல் 14.10.2017 வரை நடைபெறும் இக்கண்காட்சியில் மகளிர் திட்டம், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஆகியவற்றின் கீழ் செயல் படும் சுய உதவிக் குழுக்கள், திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு தங்களின் உற்பத்திப் பொருட்களான பருத்தி மற்றும் பட்டு ஆடைகள், மங்கையர் மனம் கவரும் செயற்கை ஆபரணங்கள், சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத சணல், மண், காகிதக் கூழ் போன்றவற்றில் செய்த செய்த கொலு பொம்மைகள், மரம் மற்றும் உலோகத்தில் செய்த தெய்வீக சிற்பங்கள், தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், குழந்தைகள் மற்றும் பெரியவர் களுக்கான ஆயத்த ஆடைகள், மெழுகுவர்த்திகள், தரமான தேன் மற்றும் மூலிகைப் பொருட்கள், உடலுக்கும் வலுவும் நலமும் தரும் சிறுதானியங்கள், சுவை யான திண்பண்டங்கள், பத்தமடைப் பாய்கள், தரை விரிப்புகள், பித்தளை குத்து விளக்குகள், சணல் மற்றும் தோலினால் செய்யப்பட்ட அழகிய கைப்பைகள், பர்சுகள், பெல்டுகள், மூங்கில் பொருட்கள், எம்ப்ராய்டரி துணிகள், டெரகோட்டா பொம்மைகள், தேயிலைத் தூள், முந்திரி, தஞ்சாவூர் ஓவியங்கள் போன்ற மாவட்டங்களில் தனித்துவம் பெற்ற பொருட்கள் அனைத்தும் விற்பனை செய்யப் படுகின்றன.

மேலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பிரசித்திப் பெற்ற பாரம்பரிய உணவு வகைகள், செட்டிநாட்டு பாரம்பரிய உணவுகள் சுவையாகவும், சுகாதாரமான முறையிலும் தயார் செய்து சுடச்சுட விற்பனை செய்யப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்க ஒரு நல்வாய்ப்பாக நடைபெற்ற இக்கண்காட்சியின் மூலம் சுய உதவிக் குழு மகளிரின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது என்றும், தங்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு, இக்கண்காட்சியில் அரங்குகள் அமைத்த அனைத்து சுய உதவிக் குழு மகளிரும் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்களை அனைத்துத் தரப்பினரும் வாங்க ஒரு நல்வாய்ப்பாக நடைபெறும் இக்கண்காட்சிக்கு அனை வரும் வருகை தர அன்புடன் அழைக்கிறோம். ■

ஆடிப் பெருக்கு விழா கண்காட்சி

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம், திருக்காம்புலியூரில் உள்ள மாயனூர் செல்லாண்டியம்மன் கோவிலில் நடைபெற்ற ஆடிப் பெருக்கு விழாவின் போது நடைபெற்ற கண்காட்சியினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம். ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கரூர் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட திட்ட இயக்குநர் மற்றும் பல்வேறு துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த கண்காட்சியில் பல்வேறு அரசு துறைகளின் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்கில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. மேலும் இந்த அரங்கில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் இ-பொது சேவை மையத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகள், கட்டணங்கள், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படும் திட்டங்கள், பயிற்சிகள், சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் போன்றவை குறித்த புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ■

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

அரியலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 954 இளைஞர்கள் பணி வாய்ப்பு வேண்டி கலந்து கொண்டனர். 25க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு, தங்கள் நிறுவனங்களுக்கு ஏற்ற இளைஞர்களை தேர்ந்தெடுத்தன. இதில் 194 இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. எஸ். செல்வராணி, உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி. ந. அனுசுயா, திரு. எஸ். சரவணபாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட கடனுதவி

நீலகிரி மாவட்டத்தில், உல்லத்தி, எப்பநாடு மற்றும் கக்குச்சி ஆகிய ஊராட்சிகளில் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதன் அவசியத்தையும், திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கம் இல்லாத ஊராட்சிகளாக அறிவிப்பு செய்திட உரிய முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கோரி விழிப்புணர்வு கூட்டம் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உல்லத்தி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக 35 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு ரூ. 1,75,000/- கடனாகவும், எப்பநாடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக 26 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு ரூ. 1,30,000/- கடனாகவும் மற்றும் கக்குச்சி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக 20 தனி நபர்களுக்கு கழிப்பறை கட்டுவதற்கு ரூ. 1,00,000/- கடனாகவும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது. ■

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்திடுங்கள்!
சணல், காகிதம், துணி ஆகியவற்றினால் தயாரிக்கும் பொருட்களைப் பயன்படுத்துங்கள்!
மின்சாரத்தையும், தண்ணீரையும் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்!

டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் தாக்காது உடல் நலத்தைக் காத்திடுங்கள்!
திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்த்திடுங்கள்!
தனிநபர் இல்லக் கழிப்பறைக் கட்டிடுங்கள்!
சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திடுங்கள்!

கல்லூரிச் சந்தை

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை கல்லூரி மாணவ மாணவியரிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் தூத்துக்குடி மாவட்டத்தில், தூய மரியன்னை கல்லூரியில் மூன்று நாட்கள் நடைபெற்ற கல்லூரிச் சந்தையினை மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். முன்னதாக தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். உதவித் திட்ட அலுவலர்கள் திரு. சிவக்குமார், திருமதி. பிரேமா, திரு. பாலராமச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த கல்லூரிச் சந்தையில் திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம், நாமக்கல், திண்டுக்கல் உட்பட பல மாவட்டங்களைச் சேர்ந்த 55 மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களாக கைவினைப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், ஆயத்த ஆடைகள் என பல்வேறு பொருட்களை விற்பனை செய்தனர். மேலும் கல்லூரி மாணவியருக்கிடையே பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டன. ■

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்

வேலூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, தனியார் நிறுவனங்களில் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பும் பெற்றுத் தரும் சிறப்பு வேலை வாய்ப்பு முகாம் 04.09.2017 அன்று சோளிங்கர் குட்லெட் மேல்நிலைப் பள்ளியில், வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இந்த முகாமில் 1490 இளைஞர்கள் பணி வாய்ப்பு வேண்டி கலந்து கொண்டனர். 64 நிறுவனங்கள் இம்முகாமில் கலந்து கொண்டு, தங்கள் நிறுவனங்களுக்கு ஏற்ற இளைஞர்களை தேர்ந்தெடுத்தன. இதில் 643 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, இதில் 525 இளைஞர்களுக்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட தொழிற்சாலை துறை அலுவலர், தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அலுவலர்கள், மாற்றுத் திறனாளி நல அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

மகளிர் குழுக்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள்

வேலூர் மாவட்டத்தில், முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் 06.09.2017 அன்று வேலூர் ஊரிசு கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் வேலூர் மாவட்டத்தின் 20 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார். முன்னதாக வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், ஊரிசு கல்லூரி பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கண்களின் ஆரோக்கியம் மேம்பட குங்குமப் பூ டீ

தற்போது கம்ப்யூட்டர் மற்றும் லேப்டாப் முன் உட்கார்ந்து, நாள் முழுவதும் வேலை செய்வதோடு, எந்நேரமும் மொபைல் போனைப் பார்த்துக் கொண்டே இருப்பதால், பார்வை பிரச்சனை ஏற்பட்டு, பலரும் கண்ணாடி அணிகின்றனர். கண்ணாடி அணிவது பார்க்க ஸ்டைலாக இருக்கலாம். ஆனால் தினமும் கண்ணாடி அணிபவர்களுக்குத் தான் அது எவ்வளவு சிரமமான விஷயம் என்று தெரியும்.

மேலும் தற்போதைய மோசமான உணவுப் பழக்கத்தால், உண்ணும் உணவுகளில் உடலுக்குத் தேவையான சத்துக்கள் ஏதும் கிடைக்காமல் கண்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. ஆனால் கண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, பார்வை பிரச்சனையைப் போக்க ஒரு பானம் உள்ளது. இப்போது அந்த பானம் குறித்து பார்க்கலாம்.

தேவையானப் பொருட்கள்

குங்குமப் பூ – 1 கிராமம்,
தண்ணீர் – ஒரு கப்
தேன் – தேவையான அளவு

தயாரிக்கும் முறை

ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி அடுப்பில் வைத்து தண்ணீர் நன்கு கொதித்ததும் அதில் குங்குமப் பூவை சேர்த்து மீண்டும் ஒரு கொதி விட்டு, அடுப்பில் இருந்து பாத்திரத்தை இறக்கி குளிர வைக்கவும். பாத்திரத்தில் உள்ள தண்ணீர் நன்கு குளிர்ந்ததும் அதில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்தால் குங்குமப் பூ டீ தயார்.

இந்த டீயை பகல் வேளையில் குடித்து வந்தால் கண் பார்வை சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரச்சனைகளும் நீங்கி, கண் பார்வைத் திறன் அதிகரித்து, கண்ணாடி போட வேண்டிய அவசியம் இருக்காது.

குங்குமப் பூ டீ பார்வையை மேம்படுத்துவதோடு, உடலில் இரத்த ஓட்டத்தை சீராக்கும். மூட்டு வலியை குணமாக்கும். உடலில் கொழுப்பின் அளவை குறைக்கும். மனதின் ஒருமுகப்படுத்தும் திறனை மேம்படுத்தும். ■

மழைக்காலத்தில் உடல் பராமரிப்பு

மழைக்காலம் ஆரம்பிக்கும் போது எந்நேரமும் மழை பெய்து கொண்டே இருக்கும். இந்தக் காலத்தில் பலரும் சளித் தொல்லையால் அவதிப்படுவர். சாலைகளில் தேங்கியிருக்கும் தண்ணீரில் நடப்பவர்களுக்கு கால்களில் சேற்றுப் புண் வர வாய்ப்புள்ளது. எனவே மழைக் காலத்தில் உடலை எப்படி பராமரிப்பது என்பதைப் பற்றி பார்ப்போம்.

மழை பெய்யும் காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தலைக்கு குளிப்பது நல்லது. மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் குளித்தால் தோலின் நிறம் மாறாமல் இருக்கும். குளிப்பதற்கு முன்பு உடல் முழுவதும் தேங்காய் எண்ணெயைத் தடவிக் கொள்ளவும். அதேபோல் முழங்காலில் இருந்து கணுக்கால் வரை தேவையற்ற முடிகளை அகற்றும் பசை தடவி மசாஜ் செய்து கொண்டால் மழை நாட்களில் இந்த இடங்களில் பூஞ்சை (பங்கஸ்) தாக்குதல் இருக்காது.

தினமும் இரவு படுக்கப் போகும் முன்பு, ஒரு பாத்திரத்தில் சிறிது வெந்நீரை ஊற்றி, அதில் உங்கள் பாதங்களை 5 நிமிடங்கள் ஊற வைத்து, கைவிரல்களால் மசாஜ் செய்யுங்கள், இப்படிச் செய்தால் உடல் முழுவதும் உள்ள இறுக்கம் விடுபட்டது போல் இருக்கும். வெளியில் சென்று விட்டு வீட்டுக்கு வரும் போது சுத்தமான தண்ணீரால் கால்களை நன்கு கழுவி, சுத்தமான துணியால் ஈரத்தைத் துடையுங்கள்.

குளிக்கும் நீரில் ஒரு கைப்பிடி அளவு வேப்பிலை போட்டு வைத்திருந்து, சிறிது நேரம் கழித்துக் குளிக்கவும். பெண்கள் மழை நாட்களில் தவறாமல் மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும். கிருமிநாசினியான மஞ்சள் சருமத்தைப் பாதுகாக்கும். மழைக்காலத்தில் மருதாணி போட்டுக் கொள்வதை தவிர்ப்பது நல்லது. மருதாணி குளிர்ச்சி என்பதால் சளி பிடிக்கும் வாய்ப்பு உள்ளது. ■

கூந்தல் அழகு

தினசரி சிகை அலங்காரம் செய்யும் போது பெண்கள் முடி இழப்பு பிரச்சனையை சந்திக்கிறார்கள். சிலருக்கு முடி அடர்த்தி இல்லாமல் இருக்கும். அதை கவனிக்காமல் விட்டு விட்டால் நாளடைவில் முடி அதிகம் கொட்ட ஆரம்பிக்கும்.

பொதுவாக முடி இழப்புப் பிரச்சினையை சந்திப்பவர்கள் நெல்லிக்காயை சாறு எடுத்தோ அல்லது நெல்லிக்காய் பொடியை எலுமிச்சை சாற்றில் கலந்தோ முடியில் தேய்த்து வர முடி உதிர்வு பிரச்சனைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அது போல் வெங்காயத்தை சாறு எடுத்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து வாரம் ஒரு முறை தலையில் தேய்த்து மசாஜ் குளித்து வந்தால் முடி உதிர்வது குறையும்.

மருதாணி பொடியை மாதம் ஒருமுறை தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் முடியின் அடர்த்தி அதிகரிக்கும். முட்டையின் வெள்ளைக் கருவுடன் ஒரு டீஸ்பூன் ஆலிவ் எண்ணெய் கலந்து பேஸ்ட் போல் செய்து, தலைமுடியில் தடவி 20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் அலசி வர முடி வளர்ச்சி பெறும். ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் மாத இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுகுக்கு சந்தா சேர்ப்பதற்கு நிர்ணயித்த இலக்கை எய்தி முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாவட்டங்கள்

1) **நாகப்பட்டினம் மாவட்டம்**
2) **தூத்துக்குடி மாவட்டம்**
3) **தஞ்சாவூர் மாவட்டம்**
4) **திருச்சிராப்பள்ளி மாவட்டம்**
5) **வேலூர் மாவட்டம்**

இந்த மாவட்டங்களுக்கு முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஒத்தத் தொழில் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

புதிய மாற்றத்தை நோக்கி பயணம்...

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், தொண்டராம்பட்டு களப்பகுதி, ஆம்பலப்பட்டு தெற்கு ஊராட்சியில், ஸ்ரீ வீரம்மாகாளி மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் கயிறுமேட் தயாரிக்கும் தொழிலை செய்து வருகின்றனர். இக்குழுவின் 12 உறுப்பினர்களும், இலக்கு மக்கள் ஆவர்.

மகளிர் திட்டத்தின் மூலம் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு கயிறுமேட் தயாரிக்கும் பயிற்சி 30 நாட்கள் வழங்கப்பட்டது. பயிற்சிக்குப் பின்னர் கூட்டமைப்பின் மூலம் 75,000/- ரூபாய் கடன் பெற்று, அந்தத் தொகையைக் கொண்டு, கயிறு மேட் மிஷின் வாங்கி, அதன் மூலம் கயிறு மேட் தயாரிக்கும் தொழிலை இக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். குழுவின் உறுப்பினர்கள் சுழற்சி முறையில் கயிறு மேட் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தொழில் மூலம் கிடைக்கும் வருவாயில் கயிறு மேட் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வரும் குழுவின் உறுப்பினர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படுவதுடன், கூட்டமைப்பில் பெற்றக் கடன் தொகையும் முறையாகத் திரும்பச் செலுத்தப்பட்டு வருகிறது.

தங்களுக்கு கயிறு மேட் தயாரிக்கப் பயிற்சி கொடுத்து, இயந்திரங்கள் வாங்க கடன் வழங்கி, இன்று மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்க வழி செய்து, தங்களின் குடும்ப வறுமையைப் போக்கிய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர் ஸ்ரீ வீரம்மாகாளி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள். ■

விருதரசி மகளிர் குழுவின் உணவகம்

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சிப் பகுதியில் செயல்படும் மகிழ்ச்சி மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் "விருதரசி உணவகம்" செயல்பட்டு வருகிறது. இந்த உணவகத்தில் இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ள 6 பெண்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த உணவகத்தில் பல்வேறு வகையான உணவுப் பொருட்கள், தின்பண்டங்கள் போன்றவை விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் இக்குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 6000/- வருவாய் கிடைக்கிறது.

தங்களுக்கு உணவகம் நடத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் திற்கும், விருதுநகர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர்களுக்கும் தங்களின் நன்றியைத் தெரிவிக்கின்றனர் மகிழ்ச்சி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள். ■

மகளிர் திட்டத்திற்கு நன்றி...

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், பிடாரமங்கலம் கிராமத்தில் செயல்படும் இளைய பாரதம் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருப்பவர் விஜயலட்சுமி. கூலி வேலைக்குச் சென்று அதன் மூலம் கிடைக்கும் குறைந்த வருவாயில் வாழ்ந்து வந்த இவர், தனது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள சுய தொழில் மேற்கொள்ள விரும்பினார். பிடாரமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் ரூ. 40 ஆயிரமும், தான் உறுப்பினராக இருக்கும் இளைய பாரதம் மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் ரூ. 40 ஆயிரமும் கடனாகப் பெற்றார்.

காட்டுப்புத்தூர் கடைவீதியில் ஒரு கடையினை வாடகைக்கு எடுத்து, அங்கு ஜெராக்ஸ் கடை வைக்க தீர்மானித்து, கடனாகப் பெற்ற தொகையில் ஜெராக்ஸ் மெஷின் ஒன்றினை வாங்கி ஜெராக்ஸ் கடை துவக்கினார் விஜயலட்சுமி. தற்போது இந்தக் கடையின் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 300/-க்கும் மேல் வருவாய் கிடைக்கிறது. மேலும் இதே கடையின் ஒரு பகுதியில் ஸ்ரீராமசமுத்திரம் ஊராட்சியில் செயல் படும் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர் ஒருவரின் மகன் மினரல் வாட்டர் மற்றும் ரெடிமேட் துணி கடை வைத்துள்ளார். இதன் காரணமாக கடையின் வாடகை மற்றும் மின்சாரம் ஆகியவற்றுக்கான செலவினை இருவரும் பகிர்ந்து கொள்கின்றனர். இதனால் செலவும் குறைகிறது.

தனது சுய தொழில் கனவை நினைவாக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மகளிர் திட்டம் ஆகியவற்றுக்கு விஜயலட்சுமி தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

கல்லூரிச் சந்தை

விருதுநகர் மாவட்டம், சிவகாசி ஸ்ரீகாளீஸ்வரி கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தை 09.08.2017 முதல் 11.08.2017 வரை நடைபெற்றது. இக்கல்லூரிச் சந்தையினை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. நா. சரவணன் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவியர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் 19 மகளிர் சுய உதவிக்குழுவினர் தங்களின் உற்பத்திப் பொருட்களை 2,29,320/- ரூபாய்க்கு விற்பனை செய்தனர். இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை விருதுநகர் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் செய்திருந்தார். ■

பிளாஸ்டிக் மறுசுழற்சி மையம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம், வடவாளம் ஊராட்சியில், பிளாஸ்டிக் மறுசுழற்சி மையம் அமைக்கப் பட்டுள்ளது. வடவளம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் செயல்படும் இந்த மையத்தில் இதுவரை 10,244 கிலோ பிளாஸ்டிக் துகள்கள் அரைக்கப்பட்டுள்ளன. இதில் 8,388 கிலோ பிளாஸ்டிக் துகள்கள் சாலை போடுவதற்காக ரூ. 2,51,640/-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர் திரு. இ. ஜான்லிங்டன் ஆகியோர் இம்மையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினர். ■

மாநகர வாழ்வாதார மையம்

வேலூர் மாவட்டத்தில், தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்ட வணிக வளாகத்தில் மாநகர மக்களுக்கான மாநரக வாழ்வாதார மையத்தினை, 15.09.2017 அன்று, வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் முன்னிலையில், வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. ஆ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்,

இம்மையத்தில் பிளம்பர், பெயிண்டர், ஓட்டுனர் போன்ற 36 துறைகளைச் சார்ந்த 79க்கும் மேற்பட்ட தொழில்களை செய்பவர்கள் பதிவு செய்துள்ளனர். பொதுமக்களின் தேவைக்கேற்ப நம்பிக்கை மிக்க பணியாளர்கள் சேவை செய்யத் தயாராக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மகளிர் திட்டமே...! காலமெல்லாம் நீ வாழ்க...!!

அமுதசுரபி போல்
ஆயிரக்கணக்கான மகளிர் குழுக்களை
இந்நாள் முதல்
ஈன்றெடுத்த மகளிர் திட்டமே!
உங்களால் முடியும் பெண்களே என்று
அறைகூவல் விடுத்து
ஊக்கத்தையும் ஆக்கத்தையும்
எங்களுக்கு வழங்கிய வழிகாட்டியே!
வங்கியில் நின்று,
ஏமாற்றத்தோடு வந்த எங்களின்
ஐயம் போக்கி ஐயிரண்டு குழுவாய் வலம் வரச்
செய்த அருட்பெரும் ஜோதியே!
ஒற்றுமையின் மூலம் வெள்ளி விழா
கொண்டாடிய விடிவெள்ளியே!
ஓங்கி உயர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளாய்
ஔடதம் நீக்கி அனைத்து மக்களையும்
ஜாதி மத இனமென்று பாராமல் எங்களை
வாழ வைத்த கற்பக விருட்சமே!
நீர் என்றும் பல்லாண்டு பல பல ஆண்டு
காலமெல்லாம் வாழ்க!

கே. மல்லிகா, தொகுப்பு ஒருங்கிணைப்பாளர்,
துவரங்குறிச்சி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்

தினம்... தினம்...

அனைத்துலக முதியோர் நாள் (அக்டோபர் 01)

ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோள்படி ஆண்டுதோறும் அக்டோபர் 1ஆம் தேதி சர்வதேச முதியோர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதிலும் உள்ள மூத்தக் குடிமக்களை மதிக்கவும், மரியாதை செலுத்தவும், அவர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் சாதனைகளை பார்த்துக் கற்றுக் கொள்ளவும் மக்களுக்கு எடுத்துரைக்கும் நாளாகக் கருதப்படுகிறது.

பொதுவாக 60 வயதைக் கடந்த ஆண், பெண் அனைவரும் மூத்தக் குடிமக்கள் அல்லது முதியோர் என்று கருதப்படுகின்றனர். அவர்களின் நலனைப் பாதுகாக்கவும், அவர்களின் உரிமைகளை மதிக்கவும் உலக நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. நம்நாட்டில் மத்திய அரசு முதியோர்களின் நலனைக் காக்கும் சட்டங்களை இயற்றியுள்ளது.

தமிழ்நாடு அரசின் சார்பிலும் முதியோர் நலன் காக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக 65 வயதைக் கடந்த ஆதரவற்றோருக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இலவச மதிய உணவுத் திட்டமும், இலவச அரிசித் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. ■

உலக கண்ணொளி தினம் (அக்டோபர் 12)

உலகக் கண்ணொளி தினம் 2000ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் இரண்டாவது வியாழக்கிழமை அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. பார்வை இழப்பைத் தடுப்பது, கண் தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை அளிப்பது போன்றவை குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும்.

பன்னாட்டு அரிமா சங்கங்கள் கண் பார்வையின்மையைத் தவிர்க்க உதவும் சில அமைப்புகளுடன் இணைந்து, முதன் முதலில் 1998 அக்டோபர் மாதம் 8 அன்று உலக கண்ணொளி நாளைக் கடைப்பிடித்தன. இந்நிகழ்வுக்குப் பின்னர் உலக சுகாதார அமைப்பின் விசன் 2020 என்ற பன்னாட்டு திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு, 2000ஆம் ஆண்டு முதல் அக்டோபர் மாதம் இரண்டாவது வியாழக்கிழமையன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

விசன் 2020 திட்டத்தில் 2020ஆம் ஆண்டளவில் கண்புரை, கண்ணின் உட்புற டிராகோமா, கண்ணில் நீர் வழிதல், குழந்தைகளின் பார்வைக் குறைபாடு, மங்கலான பார்வை, சர்க்கரை நோயால் விழித்திரை பாதிப்பு மற்றும் கண் நீர் அழுத்த நோய் ஆகிய ஏழு நோய்களால் எவரும் பார்வை இழக்கக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு அரசுகள் செயல்பட உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தி வருகிறது. ■

அனைத்துலக வன்முறையற்ற நாள் (அக்டோபர் 02)

அனைத்துலக வன்முறையற்ற நாள் என்பது நம் தேசப்பிதா மகாத்மா காந்திஜி அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. 2007ஆம் ஆண்டு ஜுன் 15ல் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அக்டோபர் 2ஆம் தேதியை வன்முறையற்ற நாளாக கடைப்பிடிக்க ஏகமனதாகத் தீர்மானித்தது.

உலகில் வன்முறையை ஒழித்து, அமைதியை நிலைநாட்ட மகாத்மா காந்திஜி அவர்கள் அரும்பாடுபட்டதை கௌரவிக்கும் பொருட்டு, அவர் பிறந்த நாளை சர்வதேச வன்முறையற்ற தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தனது வாழ்நாள் முழுவதும் அகிம்சையைக் கடைப்பிடித்து, அதன் உன்னதத்தை அனைவருக்கும் உணர்த்திய மகாத்மா காந்திஜி அவர்களின் கொள்கைகளை உலக நாடுகள் அனைத்திற்கும் பறைசாற்றி, அகிம்சையின் மகத்துவத்தை அறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் இந்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

அகிம்சை, பரந்த மனப்பான்மை, மனித உரிமை, சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றுக்கு மதிப்பளிப்பது முக்கியம் என ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டது. ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

தூய்மை பாரத இயக்கம்

அகில இந்திய சுகாதாரப் போட்டி - SWACHH - A - THON 1.0

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகம் அகில இந்திய சுகாதாரப் போட்டி - SWACHH - A - THON 1.0 என்ற போட்டியை 02.08.2017 அன்று தொடங்கி 08.09.2017 வரை நடத்தியது. இந்தப் போட்டியில் கலந்து கொள்ள தமிழ்நாட்டில் இருக்கும் முக்கிய தொழில்நுட்ப மற்றும் கலைக் கல்லூரிகளின் பிரதிநிதிகளுக்கு ஒருநாள் கருத்தரங்குக் கூட்டம் 10.08.12017 அன்று சென்னையில் நடைபெற்றது.

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக் கூட்டத்தில், தொழில்நுட்ப கல்வி இயக்குநகரத்தின் இயக்குநர் திரு. ராஜேந்திர ரத்னு, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் பிற துறைகளின் அலுவலர்கள், கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர். அகில இந்திய சுகாதாரப் போட்டியில் பங்கெடுக்கும் மாணவர்களுக்கு அணுகுமுறைகளைத் தெரிவிக்கும் வண்ணம் இந்தக் கூட்டத்தில் கருத்துப் பரிமாற்றம் நடத்தப்பட்டது.

08.09.2017 அன்று அகில இந்திய அளவில் நடைபெற்ற தூய்மை பாரத இயக்கம் ஊரக சுகாதாரப் போட்டியில் தமிழ்நாடு இரண்டு பரிசுகளை வென்றது. ■



திரு. தர்ஷன் – இரண்டாம் பரிசு

செல்வி. இலக்கியா – மூன்றாம் பரிசு

மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் 15.09.2017 அன்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 15.09.2017 முதல் 02.10.2017 வரை மாநிலம் முழுவதும் நடைபெறும் தூய்மையே சேவை இயக்கத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக "தூய்மையே சேவை" உறுதிமொழி ஏற்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம்

சேலம் மாவட்டம்

சிவகங்கை மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

களப்பணியின் குரல்கள்

மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் இணை அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டாரத்தில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் திடக் கழிவு மேலாண்மை முறைகளை ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் உடனிருந்து விளக்கமளித்தார்.

வேலூர் மாவட்டம், திமிரி வட்டாரப் பகுதியில் அதிக எண்ணிக்கையில் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு ஆலோசனைக் கூட்டம் மகளிர் திட்டத்தின் திட்ட அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.
நாள்: 03.07.2017.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பந்தட்டை, ஆலத்தூர், வேப்பூர் மற்றும் பெரம்பலூர் வட்டாரங்களில் ஒரே நேரத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் பற்றிய விழிப்புணர்வு நடத்தப்பட்டது. முதன்மை பயிற்றுநர்கள், ஊக்குநர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை திறன்பட நடத்தினர்.
நாள்: 03.07.2017.

பள்ளிக் குழந்தைகளுக்கு சுகாதாரம் குறித்த வினாவிடை போட்டி நடத்தப்பட்டது. இறுதியில் அதிக மதிப்பெண் எடுத்த குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசு வழங்கினார்.
இடம் : திருநெல்வேலி மாவட்டம். நாள் : 02.07.2017.

திருப்பூர் மாவட்டம், சோமவாரப்பட்டி பஞ்சாயத்தில் அமைந்துள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் குறித்த விழிப்புணர்வு 05.07.2017 அன்று வழங்கப்பட்டது. பள்ளி ஆசிரியர்கள், ஊக்குநர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் உடன் இருந்தனர்.

சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் திட்டஇயக்குநர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் 05.07.2017 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிலைத்த மற்றும் நீடித்த சுகாதார முறைகள் அறிவுறுத்தப்பட்டது. தலைமை கல்வி அலுவலர், பொது சுகாதார துணை இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் திட்ட அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


ஆனந்தம்
தன் வீட்டில் கழிப்பறை கட்டப் போவதைப்பற்றி மிகவும் பெருமைப்பட்டான் ஆனந்தசாமி.
என்ன ஆனந்தா, கட்டுமான வேலையெல்லாம் நடக்குதா?
ஆமா! நடந்துட்டிருக்குண்ணே.
இன்னும் ஒருவாரத்துல முடிஞ்சிடும்.
ஆனந்தசாமி கழிப்பறை கட்டும் விசயத்தை , தான் வேலை செய்யும் டவுன் சூப்பர் மார்க்கெட் வரை எல்லோரிடமும் சொல்லிவிட்டான்
பணத்துக்கு எப்படி ஏற்பாடு பண்ணின ஆனந்தா?
அது ஒண்ணும் பிரச்சினையில்ல அண்ணாச்சி.. வறுமைக்கோட்டுக்குக் கீழ உள்ளவங்களுக்கு அரசு மானியம் கிடைக்கும்.
ஏன் ஆனந்தசாமி, எங்களுக்கெல்லாம் மானியம் கிடைக்காதா?
கவலைப்படாதீங்க...
உங்கள மாதிரி பெண் தலைமையுள்ள குடும்பத்துக்கும் அரசு மானியம் உண்டு.
மாலையில் ஊருக்குத் திரும்பும்போது, பேருந்திலும் இதே பேச்சு தொடர்ந்தது.
கழிப்பறையெல்லாம் எதுக்கு தம்பி... திறந்தவெளியில போறது மாதிரி இருக்குமா?!

அப்படிச் சொல்லாதீங்க. திறந்தவெளியில போறதாலத்தான் கண்ட கண்ட நோய் பரவுது.
பணம் வேணுமில்ல.. யாரு தருவா?
அரசு மானியம் பற்றியும், அதன்மூலம் தன் வீட்டில் கழிப்பறை கட்டுவதயும் விவரிக்கிறான் ஆனந்தசாமி.
நீங்க சொல்றதைப் பார்த்தா, ரொம்ப சுலபமா இருக்கே! நீங்க கட்டறதப் பார்க்கணும்போல இருக்கே!
தாராளமா.. ரோட்டை ஒட்டித்தான் என் வீடு. ஒரு நிமிஷம் பஸ்ஸை நிறுத்தினீங்கன்னா எல்லாருமே பார்த்துப்பீங்க.
நிறுத்திடுவோம்.
அவ்வாறே நடத்துனர் பேருந்தை நிறுத்த,ஆனந்தசாமி வீட்டுக் கழிப்பறைக் கட்டுமானத்தை அனைவரும் பார்த்தனர்.
ரொம்ப நன்றிங்க. உங்களால இந்த முக்கியமான விசயத்த நாங்க எல்லாருமே தெரிஞ்சிக்கிட்டோம். வரட்டுமா!
நானும் என் வீட்டுக்குக் கழிப்பறை கட்டப் போறேன் பாருங்க.
உற்சாகமாய்க் கிளம்பியது பேருந்து.
இனி ஆனந்தம் ஆனந்தசாமிக்கு மட்டுமல்ல... அனைவருக்கும்தான்.

களப்பணியின் குரல்கள்

இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் 05.07.2017 அன்று நடந்த தூண்டுதல் செயல்முறை விளக்கத்தின் போது பங்கேற்று மாணவர்களுக்கு சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.
இடம் : எமனக்கொண்டான் மற்றும் சீத்தலை ஊராட்சிகள், மண்டபம் வட்டாரம், இராமநாதபுரம் மாவட்டம்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 05.07.2017 அன்று திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற மாவட்டமாக மாற்ற போர்க்கால அடிப்படையில் கழிப்பறைகள் கட்டும் பணிகள் குறித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உடன் இருந்தனர்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திறந்தவெளி கழிப்பிடம் இல்லா திருநெல்வேலி என்ற மாவட்ட அளவிலான இயக்கத்தை 06.07.2017 அன்று தொடங்கி வைத்தார். இந்தத் தொடக்க விழாவின் போது சுகாதாரத்தை உறுதிப்படுத்த ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் அத்தியாவசியத்தை எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி வட்டாரம், பெரியப்பட்டினம் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு தன்சுத்தம் குறித்த விழிப்புணர்வு நடத்தப்பட்டது. குறிப்பாக இந்தக் கூட்டத்தில் குழந்தைகளுக்கு கை கழுவுவதின் முக்கியத்துவம் மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் எடுத்துரைக்ககப்பட்டது.

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டாரம், நல்லசேன் அள்ளி ஊராட்சியில் தனிநபர் இல்லக் கழிப்பறையின் அவசியத்தை எடுத்துரைத்து **"முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்"** உறுதிமொழி எடுக்கப்பட்டது.
நாள்: 06.07.2017.

பள்ளிக் குழந்தைகள் மதிய உணவிற்கு முன் கை கழுவுகின்றனர். நாம் கைகளை கழுவுவதன் மூலம் பெருவாரியான நோய்களைத் தடுக்கலாம்.
நாள்: 06.07.2017.

களப்பணியின் குரல்கள்

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டாரம், அய்யலூர் ஆரம்பப் பள்ளியில் சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. நாள் : 08.08.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், சமூக சுகாதார அணுகுமுறையிலான பயிற்சியை ஊக்குநர்களுக்குத் தொடங்கி வைத்தார். மாவட்ட ஊரக வளர்ச்சியின் திட்ட இயக்குநர் பீட் பேக் பவுண்டேசன் (**Feed Back foundation**) சார்பில் திரு. அஜய் சின்கா மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். நாள்: 10.07.2017.

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நஞ்சநாடு ஊராட்சியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற கிராமமாக மாற்ற அரசு மேல்நிலைப் பள்ளியின் தேசிய மாணவர் படை மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு பேரணி 10.07.2017 அன்று நடத்தப்பட்டது.



தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து ஒப்பந்தக்காரர்கள் மற்றும் கொத்தனார்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த விளக்கக் கூட்டத்தை தொடங்கி வைத்தார். நாள் : 10.07.2017.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் தூத்துக்குடி மாவட்டத்தை திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாவட்டமாக உருவாக்கிட மாவட்ட அளவிலான பிறதுறை அலுவலர்களுடன் திட்டமிடுதல் மற்றும் பொறுப்பு நிர்ணயம் செய்தல் குறித்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தை 10.07.2017 அன்று நடத்தினார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருதபுரி வட்டாரம் அமணக்கண்பட்டி ஊராட்சித் துவக்கப் பள்ளியில் சுகாதார வரைபடம் பள்ளிக் குழந்தைகள்பங்கேற்புடன் நடத்தப்பட்டது. நாள்: 11.07.2017.

களப்பணியின் குரல்கள்

மாவட்ட அளவிலான சமூக சுகாதார அணுகுமுறையில் ஊக்குநர்களுக்கு 14.07.2017 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் மேஸ்திரிகளுக்கு தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்த ஒருநாள் பயிற்சிப் பட்டறை 16.07.2017 அன்று நடத்தப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டாரம், செருவாமணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு தன் சுத்தம் சுற்றுப்புற சூழல் மற்றும் கழிப்பறையின் அவசியம் குறித்த விழிப்புணர்வு 17.07.2017 அன்று வழங்கப்பட்டது.

தேனி மாவட்டம், சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம், காமாட்சிபுரம் ஊராட்சியில் பள்ளி மாணவர்கள் பங்கேற்புடன் திறந்தவெளி மலம் கழித்தவற்ற ஊராட்சியை உருவாக்கிட விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது.

நாள்: 18.07.2017.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற ஊராட்சிகளை உருவாக்க விழிப்புணர்வு பேரணி 20.07.2017 அன்று நடத்தப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊக்குநர்களுக்கு சமூக சுகாதார அணுகுமுறையிலான பயிற்சி;ப பட்டறை 24.07.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

களப்பணியின் குரல்கள்

மாவட்ட அளவிலான முழக்கங்களை (பிரச்சாரத்தை) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்கள் 25.07.2017 அன்று தொடங்கி வைத்தார்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம், அத்திக்கடை ஊராட்சியில் பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டத்தில் பாறை பகுதிகளில், உறிஞ்சுகுழி அமைக்க இயலாத பகுதிகளில் சூழல் மேம்பாட்டு சுகாதார தனிநபர் இல்லக் கழிப்பறைகள் எனம்பலூர் ஊராட்சியில் உள்ள இந்திரா நகர் பகுதியில் 25 எண்ணிக்கையில் கட்டப்பட்டதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னாள் சிறப்பு அலுவலர் திருமதி. சாந்தஷீலா நாயர், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களால் பயனாளிகளுக்கு ஒப்படைக்கும் நிகழ்வு 29.07.2017 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மற்றும் பிற அலுவலர்கள் பங்கேற்றனர்.

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகங்கள் இணைந்து முதன்மை பயிற்றுநர்களுக்கு மாநில அளவிலான சுகாதாரம் குறித்து இரண்டு நாள் பயிற்சி காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் பயிற்சி நிறுவனத்தில் 20.07.17 முதல் 21.07.2017 வரை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநகரத்தின் கூடுதல் இயக்குநர் திரு. லெட்சுமிபதி மற்றும் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநகரத்தின் இணை இயக்குநர் திரு. பிரேம்குமார் போன்ற முக்கிய அலுவலர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று சுகாதாரம் சார்ந்த ஒருங்கிணைந்த தகவல்களை எடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில் சமூக சுகாதார அணுகுமுறை பொது சுகாதாரம் போன்ற தலைப்புகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் இறுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநகரத்தின் கூடுதல் இயக்குநர் (ஓய்வு) /முதுநிலை ஆலோசகர் திரு. இராதா அவர்கள் நன்றியுரை நல்கினார்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்... ஒரு பார்வை...

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு, பெண்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தினை தமிழ்நாடு முழுவதும் பரவலாக்கி, அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் பல புரிந்து வரும் பெண்கள் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் பெண்களின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசுத் தீட்டும் திட்டங்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவை முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றன. அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி, மகளிர் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தி வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அடைந்துள்ள வெற்றி சுய உதவிக் குழு இயக்கம் அடைந்துள்ள மாபெரும் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்குட்பட்ட, 12 முதல் 20 ஏழை மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப் படுகின்றன. குழுக்களின் முடிவிற்கேற்ப உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் தங்களுக்குள்ளேயே கடன் வழங்குதலை ஊக்கப்படுத்துவதே சுய உதவிக் குழுக்களின் முக்கிய நோக்கம் ஆகும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2016-17ஆம் ஆண்டில் 7,839 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுய உதவிக் குழுக்களின் விவரம்

மொத்த சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை	- 6.30 இலட்சம்
மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	- 95.02 இலட்சம்
ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	- 4.38 இலட்சம்
மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	- 65.54 இலட்சம்
நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	- 1.93 இலட்சம்
மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை	- 29.49 இலட்சம்
மொத்த சேமிப்பு	- 6,839.21 கோடி
சுழல் நிதி / ஆதார நிதி பெற்ற குழுக்களின் எண்ணிக்கை	- 5.35 இலட்சம்

சுய உதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு- ரூ. 44,452.08 கோடி

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்திடவும், நிலைத்தத் தன்மையினை அடையச் செய்திடவும், கிராம ஊராட்சியில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களையும் ஒருங்கிணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பகள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் சங்கமாக பதிவு செய்யப்படுகின்றன. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொதுவான மையமாக அமைந்துள்ளன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 2012-13ஆம் ஆண்டிலிருந்து மாநிலம் முழுவதும் 31 மாவட்டங்களில் 265 வட்டாரங்களில் 8,092 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் இதுவரை 8,269 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அவைகளுக்கு ரூ. 363.76 கோடி நிதி விடுவிக்கப் பட்டுள்ளது. இந்த நிதி பயிற்சி, மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான தனி நபர் கடன், சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி / சுழல் நிதி போன்றவை களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை

தர மதிப்பீட்டில் தேர்ச்சிப் பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. இதுவரை 11,700 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக 117 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகளிடமிருந்து பெருங்கடன் பெற்று, அதனை சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு நுகர்வு மற்றும் பொருளாதாரத் தேவை களுக்கான கடன்களாக வழங்குகின்றன. கடந்த ஆறு ஆண்டுகளில் 563 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக 129.04 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2016-17ஆம் ஆண்டு 42 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 14.92 கோடி ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

சுழல் நிதி / ஆதார நிதி

சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி / ஆதார நிதி ஆகியவை வழங்குவதன் மூலம் குழுக்கள் தங்களின் மொத்த நிதியை அதிகரித்துக் கொள்ளவும் மற்றும் நிதி மேலாண்மைத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் ஒழுக்கத்தினை உருவாக்குகிறது. சுழல் நிதியை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் வங்கி களிடமிருந்து கடன் பெறும் நம்பகத் தன்மையை அடைகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

சுய உதவிக் குழுக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கை துவக்குவதன் மூலம் வங்கியுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. 2016-17ஆம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பாக 6,000 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 2,16,738 சுய உதவிக் குழுக்களுக்கு 6,387.52 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டு களில் மட்டும் 32,848.25 கோடி ரூபாய் வங்கிகளின் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்

சுய உதவிக் குழுக்கள் குறித்து நேரத்தில் கடனை திரும்பச் செலுத்துதலையும், குறைந்த வட்டியில் கடனை பெறவும் வட்டி மானியம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களின் கடன்கள் கண்காணிக்கப்பட்டு, இதுவரை, பொதுத்துறை வங்கிகள், வட்டார கிராம வங்கிகள் மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் பெற்ற 1,19,920 சுய உதவிக் குழுக்களுக்கு 25.85 கோடி ரூபாய் வட்டி மானியத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது. 2016-2017ஆம் ஆண்டு 6,606 சுய உதவிக் குழுக்களுக்கு 0.99 கோடி ரூபாய் வட்டி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. வங்கி களிடமிருந்து பெறப்படும் 3 இலட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில் அதிகபட்சமாக 5.5 விழுக்காடு வரையில் வட்டி மானிய மீள் தொகையாக சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும்.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்

சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக களப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சேவை செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வங்கிகளுக்கும் மற்றும் சமுதாய மக்களுக்கும் இணைப்பு பாலமாக செயல்பட்டு அனைத்து வங்கி சேவைகளையும் வழங்குவர். ஆரம்ப நிலையில் தேர்வு செய்யப்பட்ட சமுதாய வங்கி ஒருங் கிணைப்பாளர்கள் 3 நாட்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும். அதன் பிறகு இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பேங்கிங் மற்றும் நிதி நிறுவனத்தின் சார்பாக 12 நாட்கள் பயிற்சி அளிக்கப் படும். இந்தப் பயிற்சிக்குப் பிறகு இணையதள தேர்வின் மூலம் வெற்றி பெற்றவர்களுக்கு வங்கி முகவர், கடன் மீட்பு முகவர் (Business Corresponded, Debt Recovery Agent) என இரண்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் வங்கிகள், பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை நேரிடையாக பணியில் சேர்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு தையல், அழகுக் கலை உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 18 முதல் 60 வயதிற்குட்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இப்பயிற்சிக்கு தகுதியானர்கள். இருப்பினும் 35 முதல் 50 வயதிற்குட்பட்ட உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 5000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தீனதயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDUGKY)

திறன் மேம்பாடானது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது. ‘தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா’ (DDUGKY) திட்டத்தின் மூலம் பணியமர்வுடன் கூடிய தொழிற்பயிற்சி ஊரகப் பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 15 வயது முதல் 35 வயது வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்கள் பயன் அடைகின்றனர். பெண்கள், மாற்றுத் திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் திருநங்கைகளுக்கான அதிகபட்ச வயது வரம்பு 45 வயது வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொடர் வேலை வாய்ப்பிற்கான வாழ்வாதாரத் திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ன் தொடர் வேலை வாய்ப்பிற்கான வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் உள்ள மூன்று தொழிற்பயிற்சி கூறுகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி ஊரகக் குடும்பங்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் கீழ் வேலை பெற்று 100 நாட்கள் பணி முடித்த குடும்பங்களுக்கு ஒரு முழுமையான அணுகுமுறை திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஏழை மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கிடும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் மூலம் 2016–17ஆம் ஆண்டில் 1,940 மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர்.

ஒத்தத் தொழில் குழுக்கள்

வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத ஒத்தத் தொழில் புரியும் ஒரே பகுதியைச் சார்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒத்தத் தொழில் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு தொழில் குழுவிற்கும் வடிவமைக்கப்பட்ட காரணிகளின் அடிப்படையில் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், மூலப் பொருட்கள் வாங்குவதற்கும், சந்தை இணைப்புகள் ஏற்படுத்துவதற்கும், உறுப்பினர்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் முனைவோர் குறித்த பயிற்சிகள் வழங்கவும் தொகுப்பு நிதி வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கை அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து வருவாயை பெருக்க வழிவகை செய்கிறது.

பிளாஸ்டிக் கழிவுகளின் மறுசுழற்சி

சுற்றுச்சூழல் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஈடுபட ஊக்கப்படுத்தப்படுகின்றன. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பு முயற்சியாக பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் செலவில் நிறுவப்பட்டுள்ளன. இவை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் நிர்வகிக்கப் படுகின்றன. இந்த மையங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, துகள்களாக்கப்பட்டு அந்த பிளாஸ்டிக் துகள்கள் தார்ச் சாலைகள் போட பயன்படுத்தப்படுகின்றன.

மதி அங்காடி

மதி அங்காடி என்பது மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட பிரத்யேகமான விற்பனை மையம் ஆகும். இம்மையங்கள், நகர்ப்புற பகுதிகளில் மக்கள் அதிக மாகக் கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் / நிறுவனங்கள் போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இந்த மதி விற்பனை அங்காடிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்துவதோடு, அவற்றை விற்பனை செய்யும் மையங்களாகவும் திகழ்கின்றன.

மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சிகள்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், அவற்றை மக்களிடையே பிரபலப்படுத்தவும், ஒவ்வொரு ஆண்டும் பொங்கல், சித்திரை திருவிழா மற்றும் நவராத்திரி ஆகிய விழாக் காலங்களில் 'மகளிர் மேளா' என்ற பெயரில் மூன்று முறை விற்பனைக் கண்காட்சிகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.

கல்லூரிச் சந்தைகள்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மாணவர்களிடையே பிரபலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகள் மற்றும் விழாக் காலங்களில் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன.

மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சிகள்

தேசிய அளவில் புதுதில்லியில் நடைபெறும் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சி மற்றும் பல்வேறு மாநிலங்களின் தலைமையகத்தில் நடத்தப்படும் மண்டல அளவிலான 'சாராஸ்' கண்காட்சிகள் ஆகியவற்றில் தமிழகத்தைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்கின்றன.

கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP)

நீடித்த வேளாண்மை அடிப்படையிலான வாழ்வாதாரத்தில், மகளிரின் தற்போதைய நிலையை மேம்படுத்தும் பொருட்டும், முறையான முதலீட்டின் மூலம் அவர்களது பங்களிப்பு மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றை உயர்த்தும் பொருட்டும், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் துணைக் கூறாக பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் (மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா – MKSP) என்ற திட்டத்தினை மத்திய அரசு துவக்கியுள்ளது. இத்திட்டமானது விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள செஞ்சி, விக்கிரவாண்டி, கோலியநல்லூர், திருவெண்ணை நல்லூர், வானூர், மரக்காணம், திருப்போரூர், திருக்கழுக்குன்றம், கும்மிடிப்பூண்டி மற்றும் சோழாவரம் ஆகிய 10 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.

கலாச்சாரப் போட்டிகள்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும், அவர்களின் திறமைகளை ஊக்குவித்து வெளிப்படுத்தும் விதமாக ஆண்டுதோறும் வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. சுய உதவிக் குழு மகளிரின் திறன்களை வெளிப்படுத்துவதற்காக நாடகம், கோலப் போட்டி, பாட்டுப் போட்டி, பட்டிமன்றம் ஆகியவைகளும், உடலை வலுப்படுத்துவதற்காக கைப்பந்து, வளைப்பந்து, ஓட்டப் பந்தயம், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல் ஆகிய போட்டிகள் உட்பட பல்வேறு போட்டிகளும் நடத்தப்படுகின்றன. இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

2014-15ஆம் ஆண்டு துவக்கப்பட்ட, நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டமான தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்ட 40 நகரப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டது. எஞ்சிய நகர்ப்புற பகுதிகளில் தமிழ் நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டது. 2016-17ம் ஆண்டு முதல் தேசிய வாழ்வாதார இயக்கம் அனைத்து நகர்ப்புற பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையத்தினால் செயல்படுத்தப் பட்டு வந்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், 2016-17ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு விருது

மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 10 சுய உதவிக் குழுக்களுக்கு விருதும், தலா 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளும், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்களுக்கு விருதும், தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளும் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் சிறப்பாக செயல்படும் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விருதும், தலா 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளும், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் 1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு விருதும், 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்படுகின்றன.

மேலும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக ஒன்று கூடிப் போராடும் சுய உதவிக் குழுக்களின் பெண்களை ஊக்குவித்திட தலா ரூ. ஒரு இலட்சம் வீதம் இரண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதேபோல் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களையும் 100 விழுக்காடு கல்வி கற்றவர்களாக உருவாக்கும் 12 ஊராட்சி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்புகளுக்கு விருதும், அந்த கூட்டமைப்புகளுக்கு தலா ரூ. 50 ஆயிரம் வீதம் காசோலைகளும் வழங்கப்படுகின்றன.

சிறந்த வங்கியாளர்களுக்கான விருது

அதிக அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கிட வங்கிகளை ஊக்கப்படுத்திடவும் மற்றும் வங்கியாளரிடையே ஆரோக்கியமான போட்டிய உருவாக்கவும் சிறந்த வங்கிகளுக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன. அதன்படி மாநில அளவில் சிறப்பாக செயல்படும் மூன்று வங்கிகள் அல்லது வங்கிக் கிளைகளுக்கு விருதுடன் கூடிய சான்றிதழ்களும், சிறப்பாக செயல்படும் மகளிர் தொழில் முனைவோர் வங்கிக் கிளைகள் இரண்டிற்கு முறையே 1 இலட்சம் ரூபாய் மற்றும் 75 ஆயிரம் ரூபாய் காசோலைகளும், விருதும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு வங்கி (200 வங்கிக் கிளைகளுக்கு மேல் உள்ள மாவட்டங்களில் 2 வங்கிகளுக்கு) மற்றும் 2 வங்கிக் கிளைகளுக்கு முறையே 1 இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் காசோலைகளும், விருதும் வழங்கப்படுகிறது.

மகளிர் மேம்பாட்டிற்காக அயராது செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் ஆக்கப்பூர்வமான பணிகளால் சுய உதவிக் குழு மகளிர் அனைத்துத் துறைகளிலும் முன்னிலைப் பெற்று வருகின்றனர் என்பது நம் அனைவருக்கும் பெருமை அளிக்கும் செயலாகும். ■

(நன்றி - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு - 2017-2018)

தூய்மையே சேவை இயக்கம் உறுதிமொழி ஏற்பு

தமிழகம் முழுவதும் செப்டம்பர் 15 முதல் அக்டோபர் 2 வரை 'தூய்மையே சேவை' இயக்கப் பணிகள் நடைபெற உள்ளன. திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடையும் நோக்கில், கழிவறை இல்லாதவர்களின் வீடுகளில் கழிவறை கட்டுதல், அனைத்து பொது இடங்களிலும் சுத்தம் செய்தல், பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், சுற்றுலா மற்றும் வழிபாட்டுத் தலங்களில் மக்களின் பங்கேற்புடன் தூய்மை செய்தல் போன்ற நடவடிக்கைகள் இந்த இயக்கத்தில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில், சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தூய்மையே சேவை இயக்கம் குறித்த உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்டத்தின் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

புதிய இந்தியா இயக்கம் விழிப்புணர்வு பேரணி மற்றும் உறுதிமொழி ஏற்பு

புதுக்கோட்டை மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், புதிய இந்தியாவின் இயக்கம் 2017-2022 என்பதை மையக் கருத்தாக வைத்து 12.08.2017 அன்று புதுக்கோட்டை மாவட்ட பொது அலுவலக வளாகத்தில் இருந்து மாவட்ட மகளிர் திட்டம் வரை உறுதிமொழியுடன் கூடிய விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பேரணியை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திரு. சு. கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று, கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்தப் பேரணியில் புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ச. சரோஜாதேவி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தைச் (NULM) சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். ■

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களின் சார்பில் புதிய இந்தியாவிற்கான உறுதி மொழி எடுத்தல் நிகழ்ச்சி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. பிச்சை அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் தூத்துக்குடி மாநகராட்சியில் 5 இடங்களில் மகளிர் சுய உமவிக் குழுக்கள் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க தொழிற்பயிற்சி பயனாளிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. எல். ராஜா,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 71வது இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 12 கடற்கரையோர மாவட்டங்களில் 71வது இந்திய சுதந்திர தின விழா 15.08.2017 அன்று மிகச் சீரும் சிறப்புமாக எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. 238 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலும் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் இணைந்து, நமது தேசியக் கொடியை ஏற்றி வணக்கம் செலுத்தினர். நாட்டுப் பற்றை அதிகப்படுத்தும் விதத்தில் கோலப்போட்டி நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கலை நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டி மற்றும் இசை நாற்காலிப் போட்டி போன்றவை நடத்தப்பட்டதுடன், மகளிருக்கு கயிறு இழுக்கும் போட்டியும், இசை நாற்காலிப் போட்டியும் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு பகுதியிலும் நலிவுற்ற மக்களுக்கு துயர் குறைப்பு நிதி கடன், கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வாழ்வாதார தொழில் கடன், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள், கணவனை இழந்தோர், போன்ற நலிவுற்ற பிரிவினர்களுக்கு வருவாய் ஈட்டக் கூடிய தொழில் செய்வதற்கு தனிநபர் கடன் போன்றவை வழங்கப்பட்டன.

திருவள்ளூர் மாவட்டத்தில் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களும், பிற மாவட்டங்களில் மத்திய திட்ட மேலாண்மை அலகின் மேலாளர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மாவட்டச் செயலாக்க அலுவலர், இரண்டாம் நிலை அலுவலர்கள், கூட்டு வள மைய பணியாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு, சுதந்திர தினத்தை சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

15.08.2017 அன்று மட்டும் ரூ. 385.94 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகள் சம்பந்தப்பட்ட கூட்டமைப்பு அளவில் வழங்கப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு

சுய உதவிக்குழு நேரடி வங்கிக் கடன் இணைப்பு		துயர் குறைப்பு நிதி		கூட்டுப் பொறுப்பு குழு		IGA கடன்		PLF கடன்		மொத்தம்	
எண்ணிக்கை	தொகை (ரூ)	எண்ணிக்கை	தொகை (ரூ)	எண்ணிக்கை	தொகை (ரூ)	எண்ணிக்கை	தொகை (ரூ)	எண்ணிக்கை	தொகை (ரூ)	எண்ணிக்கை	தொகை (ரூ)
72	69.43	552	35.77	107	224.9	325	34.13	170	22.45	1226	386.63

தலைச்சுமடு மீன் விற்பனை செய்யும் மகளிருக்கு குளிர்பதனப் பெட்டி மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (பகுதி 1) செயல்பட்டு வரும் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் தலைச்சுமடு மீன் வியாபாரம் செய்யும் 1130 மகளிருக்கு ரூ. 56.35 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்பதனப் பெட்டி, அலுமினிய பாத்திரங்கள், எடைபோடும் தராசு மற்றும் கத்தி உள்ளிட்ட உபகரணங்கள் தலா ரூ. 7,000/– மதிப்பீட்டில் மாவட்ட மீனவ சங்கங்களின் சம்மேளனங்களின் மூலமாக வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள், திருவள்ளூர் மாவட்ட மீனவ சங்கங்களின் சம்மேளனத்தின் முதன்மை நிர்வாகி திரு. பெர்னாட், கவிகா மீனவ சங்கங்களின் சம்மேளனத்தின் முதன்மை நிர்வாகி திரு. தேவதாஸ், நாகை மாவட்ட மீனவ சங்கங்களின் சம்மேளனத்தின் முதன்மை நிர்வாகி திரு. விஜய், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் செயலாக்க அலுவலர்கள் மற்றும் திட்ட களப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த உபகரணங்கள் மூலம் மீன் வியாபாரம் செய்யும் மகளிர் மீன் கெடாமல் பாதுகாப்பதுடன், சுகாதாரமான முறையில் மீன்களை எடை போட்டு விற்பனை செய்வதன் மூலம் நல்ல விலைக்கு விற்று இலாபம் ஈட்ட முடியும் எனத் தெரிவிக்கப் பட்டது. இந்த உபகரணங்கள் 80 சதவிகிதம் திட்ட நிதியிலும், 20 சதவிகிதம் பயனாளிகள் பங்களிப்பாகவும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ■

கோல்டு கவரிங் ஆபரணங்கள் தயாரிக்கும் கூட்டுப் பொறுப்புக் குழு

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுப்பட்டினம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பின் மூலம் கோல்டு கவரிங் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் முஜிபுனிஷா, கோமதி, பாத்திமா, ஜோஸ்பின், நூர்ஜஹான் ஆகிய 5 நபர்களும் சேர்ந்து, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், நாபின்ஸ் நிதி நிறுவனம் ஆகியவற்றின் மூலம் ரூ. 1,50,000/– கடன் பெற்று, கோல்டு கவரிங் நகைகள் விற்பனை தொழிலைத் தொடங்கினர்.

கோல்டு கவரிங் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் கூறும் போது, 'நாங்கள் பெற்றக் கடனில் இதுவரை ரூ. 45,000/– அசலும் வட்டியும் செலுத்தியுள்ளோம். கோல்டு கவரிங் நகைகள் விற்பனை செய்வதன் மூலம் எங்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்து உள்ளது. எங்களின் வாழ்க்கை முன்னேற்றத் திற்கு உதவிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி' என உறுப்பினர்கள் அனைவரும் தெரிவித்துக் கொண்டனர். ■

திருவள்ளூர் மாவட்டத்தில் மீன் விற்பனை சங்க உறுப்பினர்களுக்கு கடன் மீட்டு நிதி வழங்குதல்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வைரவன் குப்பம் மற்றும் கூனங்குப்பம் மீனவ விற்பனைச் சங்கங்களைச் சேர்ந்த 146 உறுப்பினர்களுக்கு ரூ. 24 இலட்சம் தொகை கடன் மீட்பு நிதியாக திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களால் 23.08.2017 அன்று வழங்கப்பட்டது.

ஒவ்வொரு மீனவ விற்பனைச் சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 25,000/– முதல் ரூ. 30,000/– வரை கடன் மீட்பு நிதியாக 12 சதவிகிதம் ஆண்டு வட்டி விகிதத்தில் திருப்பி செலுத்தும் கடனாக வழங்கப்பட்டது. இதன் மூலம் மேற்படி உறுப்பினர்கள் மீன் விற்பனை செய்வதற்கு முன்பணமாக மீன் வாங்கும் இடைத்தரகர்களிடமிருந்து பெற்ற கடனை திரும்ப செலுத்தி விட்டு, தாங்கள் அன்றாடம் பிடிக்கும் மீன்களை மீனவ சங்கங்கள் மூலமாக நேரடியாக விற்பனை செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மீன்களை நல்ல விலைக்கு விற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு நாள் மீன் விற்பனை தொகையிலிருந்து 2 சதவிகிதம் உறுப்பினர் சேமிப்புத் தொகையாக அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் பிடித்து வரும் மீன்களுக்கான விற்பனைத் தொகை இந்த மீனவ விற்பனைச் சங்கங்கள் மூலம் பெறப்படுவதால், மாதாந்திர கடன் தவணையை மீனவ விற்பனைச் சங்கத்தின் கடன் கணக்கில் வரவு வைத்து கடனைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக உள்ளது. ■

காப்பீடு செய்வதால் கிடைக்கும் பலன்கள் – ஒரு பார்வை

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பல்வேறு காப்பீடு வசதிகள் கடலோர சமுதாய மக்களுக்காக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. கடலோர மீன்பிடி மீனவர்களுக்கு தங்களின் சிறு படகுகளை காப்பீடு செய்வதற்காக புதியதொரு திட்டம் உருவாக்கப்பட்டது. இதன்படி கடலூர் மாவட்டத்தில் உள்ள சி. புதுப்பேட்டை கிராமத்தை சேர்ந்த திரு. தேவேந்திரன் என்ற மீனவர் ரூ. 1000/– செலுத்தி தனது சிறு படகுக்கு காப்பீடு செய்திருந்தார். கடந்த மாதத்தில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தால் படகு பழுதடைந்துள்ளது. காப்பீட்டு நிதியாக ரூ. 50,000/–ம் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களால் 26.08.2017 அன்று அப்பயனாளிக்கு வழங்கப்பட்டது.

மேலும் கடலூர் மாவட்டத்தில் சேடப்பாளையம் மற்றும் குடிகாடு ஆகிய ஊராட்சிகளில் 2 கால்நடைகளை இழந்த திருமதி. உஷா மற்றும் திருமதி. மீரா ஆகியோருக்கு தலா ரூ. 30,000/– வீதம் கால்நடை இழப்பு காப்பீட்டுத் தொகை திட்ட கூடுதல் இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டது.

சிறு தொகையை செலுத்தி காப்பீடு செய்வதன் வாயிலாக எதிர்பாராமல் ஏற்படும் நஷ்டங்களை ஈடு செய்வதன் மூலம் ஏழை மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படாமல் செய்ய உதவி புரிய வேண்டுமென்பது இத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும் என்று கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் பயனாளிகளுக்கு எடுத்துரைத்தார். ■

மாவட்ட அளவிலான செயலாக்க ஆலோசனைக் குழுக் கூட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 20 கடலோர கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான செயலாக்க ஆலோசனைக் குழுக் கூட்டம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 29.08.2017 பிற்பகல் 04.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில் குழு உறுப்பினர்களான இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி, திட்ட அலுவலர், மகளிர் திட்டம், தூத்துக்குடி மாவட்ட செயலாக்க அலுவலர், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், தூத்துக்குடி, செயற்பொறியாளர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி, இணைப்பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள், தூத்துக்குடி, உதவி இயக்குநர், மீன்வளத்துறை, தூத்துக்குடி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) தூத்துக்குடி, செயலர், மாவட்ட ஊராட்சி, தூத்துக்குடி, மண்டல இணை இயக்குநர், கால்நடை பாராமரிப்புத் துறை, தூத்துக்குடி, மேலாளர், நாபின்ஸ், நாகர்கோவில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாழ்வாதார வரைபடம் மற்றும் குடும்ப அளவிலான அடிப்படை கணக்கெடுப்பு, ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு கட்டிடம் கட்டுதல், மீன் வலைப் பின்னும் கூடம் அமைத்தல், நுண் திட்டமிடல், கூட்டுப் பொறுப்புக் குழுக்களை அமைத்தல், ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பினை மறு சீரமைப்பு செய்தல், அரையாண்டு திட்டமிடல் கருத்தரங்கு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி இணைப்புக் கடன், மீனவர் முன்னேற்ற சங்கக் கட்டிடம் கட்டுதல், மீன் சந்தைக் கூடம் கட்டுதல், சமுதாய பட்டறிவு பயணம் மேற்கொள்ளுதல், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி வழங்குதல், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கு நிதி மேலாண்மைப் பயிற்சி, மேலாண்மை பயிற்சி, காப்பீட்டுக் கல்வி பயிற்சி மற்றும் வருமானத்தைப் பெருக்கும் தொழில்களுக்கான பயிற்சிகள் வழங்குதல் மற்றும் நிர்வாக செலவினங்கள் ஆகிய செயல்பாடுகள் மீது ஆலோசனை செய்யப்பட்டு, திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. ■

நலத்திட்ட வழிகாட்டி செயலி குறித்து ஒருநாள் பயிற்சி

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் நலத்திட்ட வழிகாட்டி செயலி குறித்த ஒருநாள் கருத்தரங்கம் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் உள்ள படித்த பெண்கள் ஸ்மார்ட் போன் வசதியுடன் நலத்திட்ட வழிகாட்டு செயலியை பதிவிறக்கம் செய்து கொண்டு, கிராம மக்களின் அடிப்படை விவரங்களை பதிவு செய்தவுடன் நடைமுறையிலுள்ள மத்திய அரசு, மாநில அரசின் திட்டங்கள் மற்றும் பிற தனியார் திட்டங்களில் உள்ள பலன்கள் குறித்து பெறுவதற்கான தகுதிகளை அறிந்து கொள்ள இயலும். இச்சேவை செய்வதன் மூலம் திட்டங்களின் தகுதிகளை தெரிந்துக் கொண்டு, அதற்கான விண்ணப்பப் படிவங்களையும் பதிவிறக்கம் செய்து, சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பிட வாய்ப்புகள் உள்ளன.

சோதனை அடிப்படையில் 3 மாத காலம் களப்பயிற்சி மற்றும் விருப்பப்படும் மக்களுக்கு அரசின் திட்டங்களை எடுத்துக் காட்டி, முறையாக விண்ணப்பித்து, உரிய நலத் திட்ட பலன்களைப் பெற்றுக் கொள்ள இந்த செயலி உதவும் என கூடுதல் இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ■

புதிய மாவட்டங்களில் பணிபுரியும் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கான பயிற்சி

கன்னியாகுமரி மாவட்டம், ஸ்டெல்லா மேரீஸ் இன்ஸ்டியூட் ஆப் டெவலப்மெண்ட் ஸ்டெடீஸ் தொண்டு நிறுவனத்தில் 31.08.2017 மற்றும் 01.09.2017 ஆகிய தினங்களில் புதிய மாவட்டங்களில் பணிபுரியும் சமுதாய வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு (ம) மதிப்பீட்டு அலுவலர், கணக்கு அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர் மற்றும் திட்டப் பணியாளர்களுக்குத் திட்ட செயலாக்கம் குறித்த பயிற்சி நடைபெற்றது.

மேற்படி பயிற்சியில் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி, திருவாரூர் மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 6 மாவட்டங்களைச் சேர்ந்த 34 நபர்கள் கலந்து கொண்டனர். பயிற்சியில் மத்திய திட்ட மேலாண்மை அலகு முதுநிலை மேலாளர், நிறுவன மேம்பாட்டு மேலாளர், நிதி மற்றும் கணக்கு மேலாளர் மற்றும் மாவட்ட செயலாக்க அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியை நடத்தினர்.

பயிற்சியின் இரண்டாம் நாள், கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொண்டுள்ள திட்டப் பணிகளை களத்தில் சென்று பார்வையிட்டனர். அதன்படி இராஜக்காமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் பல்வேறு திட்டங்கள் மற்றும் நிர்வாக செயல் பாடுகள் கேட்டறியப்பட்டன. மேலும் சமையலறைக் கழிவு மூலம் எரிவாயு தயாரித்தல் கழிவு மூலம் எரிவாயு தயாரித்தல் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழு ஆகியவற்றைப் பார்வையிட்டனர். பயிற்சி இனிதே நிறைவு பெற்றது. ■

திருவள்ளூர் மாவட்டத்தில் சமுதாய உட்கட்டமைப்பு பணிகள் அடிக்கல் நாட்டு விழா

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்ததில் 3 மீன் விற்பனைச் சங்க கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டு விழா திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களால் பூமி பூஜை மூலம் துவங்கப்பட்டது.

வைரவன் குப்பம், கூனங்குப்பம் ஆகிய கிராமங்களில் தலா ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டில் இக்கட்டிடங்கள் கட்டப்பட்டு, மீன் விற்பனைச் சங்கங்களின் அலுவலக மாகவும், மீன் விற்பனை நிலையமாகவும் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. இக்கட்டிடங்களை புதிய வடிவமைப்புடன் 3 மாதங்களுக்குள் கட்டி முடித்திட துரித நடவடிக்கை எடுக்குமாறு கூடுதல் இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ■

விழுப்புரம் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல்

விழுப்புரம் மாவட்டத்தில் அனுமந்தை பல்லவன் கிராம வங்கியின் மூலம் 58 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ. 1.68 இலட்சம் வாழ்வாதாரக் கடன் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களால் வழங்கப்பட்டது.

மீன் வியாபாரம் செய்தல், இளநீர் வியாபாரம், காய்கறி கடைகள் மற்றும் பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான கடன்கள் 12 சதவீதம் ஆண்டு வட்டியுடன் 36 மாத தவணைகளில் திரும்ப செலுத்திடும் கூட்டுப் பொறுப்புக் குழு கடன்களாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்டச் செயலாக்க அலுவலர் திருமதி. தாரா ஈஸ்வரி, அனுமந்தை பல்லவன் கிராம வங்கியின் கிளை மேலாளர் திருமதி. சுதா, மாவட்ட ஆலோசகர் திரு. மனோகரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. இருதயராஜ் மற்றும் நிறுவன வளர்ச்சி அலுவலர் திருமதி. ஜெனித்தா ரானி ஆகியோர் கலந்து கொண்டனர். ■

கூட்டு பொறுப்புக் குழுக்களின் பதிவேடுகளில் 31.08.2017 வரை பராமரித்தல் – புதிய முயற்சி

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் உள்ள அனைத்து கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் பதிவேடுகளை 31.08.2017 வரை முழுமையாகப் பதிவு செய்யப்பட்ட விவரங்களை மாவட்ட அளவில் 01.09.2017 அன்று மாவட்ட ஒருங்கிணைப்பாளர், வியாபார ஊக்குநர், கூடுதல் வியாபார ஊக்குநர் மற்றும் ஆலோசகர் ஆகியோர் இணைந்து பதிவேடுகளை சரிபார்த்தனர். அனைத்துக் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் சேமிப்பு மற்றும் கடன் தவணைகள் முறையாக திருப்பம் செய்யப்பட்டுள்ளதா? எனவும், உரிய விவரங்கள் பதிவேடுகளின் பதியப்பட்டுள்ளதா? எனவும் முழுமையாக சரிபார்க்கப்பட்டது. ■

தேசிய பட்டறிவுப் பயணம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் மேலாளர்கள், மாவட்டச் செயலாக்க அலுவலர்கள், ஆலோசகர்கள், சமுதாய வளர்ச்சி அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர், இளநிலை வல்லுநர்கள் ஆகிய 18 நபர்களைக் கொண்ட குழு தேசிய பட்டறிவு பயணமாக மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய மகிளா ஆர்த்திக் விகாஸ் மகாமண்டல் திட்டம் செயலாக்கம் குறித்து 07.09.2017 முதல் 3 நாட்கள் பயணம் மேற்கொண்டனர். இந்தப் பயணத்தின் போது கிராமப்புறங்களில் பெண்களை குழுக்களாக ஒருங்கிணைத்து, பயிற்சி கொடுத்து, மானியமில்லாத கடனை வங்கிகள் மூலம் வழங்கி வாழ்வாதாரத்தை உயர்த்திடும் நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டனர்.

மேலும் புனே மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்ட வழிகாட்டி செயலி பயன்பாடு குறித்தும், ஆய்வு மேற்கொண்டு, தமிழ்நாட்டின் கடற்கரையோர பகுதி களில் இந்த செயலியை பயன்படுத்துவது குறித்தும் அறிந்து கொண்டனர். ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079.
Published from (65,500 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிக் கடன் இணைப்பு வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandam of Understanding)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிக் கடன் இணைப்பு வழங்க, IDBI வங்கி மற்றும் ICICI வங்கி ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 08.09.2017 அன்று சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள நமது தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தகுதி வாய்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்க, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யும். வங்கிகள் குழுக்களின் தரம் மற்றும் சேமிப்பின் அடிப்படையில் RBIயின் அறிவுறுத்தலின்படி, கடன் தொகையை நிர்ணயித்து, குறுகிய காலத்தில், குறைந்த வட்டியில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வட்டி மானிய திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்கு கடன்களை வழங்கும்.

சுய உதவிக் குழுக்கள் தாங்கள் பெற்ற வங்கிக் கடன்களை தவணை தவறாது திரும்பச் செலுத்த, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களும், IDBI வங்கியின் செயல் இயக்குநர் திரு. அப்ஹே லக்ஷ்மண் போங்கிர்வார் அவர்களும் மற்றும் ICICI வங்கியின் மண்டல தலைவர் திரு. ஸ்ரீதர் ரங்கநாதன் அவர்களும் கையொப்பமிட்டனர்.

இந்த நிகழ்வின் போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திரு. அண்ணாமலை பிரேம்குமார் அவர்கள், திருமதி. கா. சுஜாதா ஜேக்கப் அவர்கள், தலைமை அலுவலக அலுவலர்கள், IDBI வங்கி மற்றும் ICICI வங்கி ஆகியவற்றின் அலுவலர்கள் உடனிருந்தனர். ■

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication : 2nd Week of the every month

தூய்மையே சேவை – உறுதி மொழி

இன்று முதல் மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ம் தேதி வரை நடைபெற உள்ள ‘தூய்மையே சேவை’ இயக்கத்தில் நம்மை முழுமையாக அர்ப்பணித்து அதன் மூலம் சுத்தமான, சுகாதாரமான, புதிய பாரதத்தை உருவாக்க உறுதிமொழி ஏற்போம் !

- ❖ வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள், சுகாதார நிலையங்கள், தொடர்வண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், நீர் நிலைகள் மற்றும் இதர பொது இடங்களில் தூய்மையைக் கடைபிடிப்போம் ! என்றும்
- ❖ வீடுகளில் இரட்டை உறிஞ்சு குழிகளுடன் கூடிய கழிப்பறைகளைக் கட்டுவதுடன், அவ்வாறு கழிப்பறைகள் கட்டாதவர்களையும் கழிப்பறைகள் கட்டச் செய்து, திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற கிராமங்களும், நகரங்களும் உருவாக்கப் பாடுபடுவோம் ! என்றும்
- ❖ கழிப்பறை பயன்படுத்துவதுடன், கை, கால்களை சுத்தமாகக் கழுவுதல் மற்றும் இதர சுகாதார பழக்கங்களையும் கடைபிடிப்போம் ! என்றும்
- ❖ “குறைத்தல், மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு” என்ற கோட்பாட்டின்படி திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை திட்டத்தினை பாதுகாப்பான முறையில் செயல்படுத்துவோம் என்றும் உறுதி ஏற்போம் ! !